## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தமிழ்நாடு அரசின் டாக்டர் அம்பேத்கர் விருது – விருதுத் தொகை ஒரு இலட்சம் என்பதை ரூ.5,00,000ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது - கூடுதல் தொகை ரூ.4,00,000 நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.


---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடு.தடு 1)துறை

அரசாணை (ப) எண்: 65

நாள் :29.03.2022
பிலவ பங்குனி 15ம் நாள்
திருவள்ளுவராண்டு 2053
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 52, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (கு.பா.ச) துறை, நாள். 22.03.1995.
2. அரசாணை (ப) எண். 175, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (கொடுதடு) துறை, நாள். 14.12.2021.
3. செய்தி வெளியீடு எண்.092, நாள்.13.1.2022.
4. அரசாணை (நிலை) எண். 7, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (கொடுதடு) துறை, நாள்.13.01.2022.
5. ஆதிதிராவிட நல ஆணையரின் கடிதம் ந.க.எண்.ஆ2/ 29608/ 2021, நாள் 24.01.2022.

---

### ஆணை:-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு அம்மக்களின் முன்னேற்றத்திற்கு தொண்டு செய்து வரும் தமிழ்நாட்டை சேர்ந்த ஒருவருக்கு "டாக்டர் அம்பேத்கர் விருது" என்ற பெயரில் விருதும், நற்சான்றிதழும், ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) பரிசுத் தொகை மற்றும் 8 கிராம் தங்கப் பதக்கமும் வழங்குவதென முடிவு செய்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டு இத்திட்டம் ஆண்டுதோறும் அரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2021-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் டாக்டர் அம்பேத்கர் விருதிற்காக ரூ.1,00,000/- காசோலை வழங்குவதற்கும், ஒரு சவரன் மதிப்பிலான தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை போன்ற இதர செலவினங்களுக்கு ரூ.65,000 ஆக மொத்தம் ரூ.1,65,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீடு எண்.092, நாள் 13.01.2022இல், தமிழ்நாடு அரசின் "டாக்டர் அம்பேத்கர் விருதிற்காக" அரசால் தெரிவு செய்யப்படும் விருதாளருக்கு விருதுத் தொகையாக தற்போது வழங்கப்பட்டு வரும் ஒரு இலட்சம் ரூபாய் என்பதை இவ்வாண்டு முதல் ரூ.5,00,000/-மாக உயர்த்தியும், இவ்விருதுத் தொகையுடன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை ஆகியவை வழங்கப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2021-ஆம் ஆண்டுக்கான டாக்டர் அம்பேத்கர் விருது மேனாள் நீதியரசர் திரு. கே. சந்துரு அவர்களுக்கு வழங்க அரசால் முடிவெடுத்து ஆணை வெளியிட்டதின் அடிப்படையில் அவருக்கு ரூ.5,00,000 விருதுத் தொகையும், 8 கிராம் தங்கப்பதக்கமும், தகுதியுரையும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ள முன்மொழிவில், டாக்டர் அம்பேத்கர் விருதிற்காக தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை போன்ற இதர செலவினங்களுக்காக ரூ.65,000-வுடன், விருதுத் தொகையாக ரூ.1,00,000-ம் ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில், கூடுதலாக தேவைப்படும் தொகையான ரூ.4,00,000/-ஐ, 2021-2022ஆம் நிதியாண்டிற்கான இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ. 1,00,000 போக கூடுதல் நிதியான ரூ. 4,00,000-ஐ ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 01 - ஆதிதிராவிடர் நலன் 800 ஏனைய செலவு - மாநில செலவினங்கள் - LX ஆதிதிராவிட நலனை மேம்படுத்துபவர்களுக்கு டாக்டர் அம்பேத்கர் விருது 359 பரிசுகளும் வெகுமதிகளும், 01 பரிசுகளும் வெகுமதிகளும்.

(IFHRMS த.தொ.கு.2225-01-800-LX-35901)

8. மேலே பத்தி 6-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ. 4,00,000/- 2021-2022 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலே பத்தி 6-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆணையர் ஆதிதிராவிடர் நலம் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் எஞ்சியத் தொகை ஏதுமிருப்பின், அதனை உடனடியாக அரசுக் கணக்கில் திரும்ப செலுத்தவும் ஆணையர், ஆதிதிராவிடர் நலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.15801/ஆதி(ம)பந துறை/2022, நாள்.28.03.2022 பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. மணிவாசகன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை - 600 005.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை - 600 008.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை - 600 035.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை - 600 009/18.
பொதுத் (பொது-1)துறை, சென்னை - 600 009.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை - 600 009.
நிதித் (ஆதி(ம)பந (வ.செ.பொ-2/வ.வா-1) துறை, சென்னை - 600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், சென்னை - 600 009.
இருப்பு கோப்பு/உபரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

30/3/22
தேர்வு நிலை பிரிவு அலுவலர்
29/3/22